





# ஆரத்தி

## மங்களம்

ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய என அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெகம் எங்கும் அமைதியைத் தா – ஓம் ஸ்ரீ ஜெய.....

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவை எல்லாம் அடைய
அம்மம்மா . தேவை எல்லாம் மறைய
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பில் எம்மை ... ஓம் ஸ்ரீ ஜெய.....

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈசுவரி பலம் அருள்வாய்
அம்மம்மா . ஈசுவரி வரம் அருள்வாய்
கரங்குவித்தோம் இனி காலை விடோமடி
கருணை உடன் அணைப்பாய் ... ஓம் ஸ்ரீ ஜெய.....

காசினி எங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பு அருள்வாய்
அம்மம்மா . கருத்தினில் அன்பு அருள்வாய்
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவி உன் அடைக்கலம் நாம் ... ஓம் ஸ்ரீ ஜெய .....

நமஸ்காரம் கூறி கருத்தினில் ஞான
நல் ஒளி தீபம் வைத்து
அம்மம்மா . நல் ஒளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற்கு அமைதியைத் தா ... ஓம் ஸ்ரீ ஜெய .....